(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No.71/2024**

Deposition of Prosecution/Defence/Court Witness for PW.8 (LW.7 )

| | | |
|---|---|---|
| Name | : | மாரிமுத்து |
| Father's/Husband Name | : | பெருமாள் |
| Village | : | தேவனாங்குறிச்சி |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Occupation | : | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| Age | : | 55 |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of **06.05.2026**

**முதல் விசாரணை:–**

1) நான் தற்போது திருச்செங்கோடு நகர காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 27.09.2023 ம் தேதி காலை சுமார் 6 மணியளவில் திருச்செங்கோடு ஊரக காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக நான் நிலைய அலுவலில் இருந்த போது திருச்செங்கோடு வேலன் தனியார் மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற அடிதடி தகவலின் பேரில் அங்கு சென்று உள்நோயாளி சிகிச்சை பிரிவில் இருந்து திவாகர் என்பவரை விசாரித்து நிலையம் வந்து நிலைய குற்ற எண்.289/2023 சட்டப்பிரிவுகள் 341, 294(b), 324, 506(ii) என்ற சட்டப்பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அசல் புகார்

வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் ஒரு நகலை மேல் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வார் திருமதி.மலர்விழி அவர்களின் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

சம்பவம் நடந்த தேதி 26.09.2023 என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 27.09.2023ம் அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு 27.11.2023 ம் தேதியன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கால தாமதத்திற்கான காரணம் எதுவும் நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். புகாரில், புகார்தாரரின் மனைவி மற்றும் அவரது தம்பி ஆகியோர் தகவல் தெரிந்துதான் சம்பவம் இடம் வந்ததாக புகார்தாரர் கூறியுள்ளார் என்றால் சரிதான். புகார் பெற்றவுடன் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமல் காயச்சான்று பெற்றபின் இரண்டு மாதம் கழித்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. அதனால் தான் இரண்டு மாதங்கள் கால தாமதாக முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த புகார் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:–** இல்லை

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.05.06 19:05:14 +0530